## ரூ.98 கோடி டெண்டர் முறைகேடு, வருமானத்தை மீறி சொத்து சேர்ப்பு:

# எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், ஆர்.காமராஜ், நத்தம் விஸ்வநாதன் மீது லஞ்ச ஒழிப்பு துறையில் வழக்குகள் நிலுவை!

சென்னை, மே 14 -

டெண்டர் முறைகேடு, வருமானத்திற்கு அதிகமாக சொத்துகள் சேர்த்தது, குட்கா வழக்கு, உணவு கொள்முதல் செய்தது உள்ளிட்ட வழக்குகளில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், ஆர்.காமராஜ், நத்தம் விஸ்வநாதன், எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை, சி.பி.சி.ஐ.டி., சி.பி.ஐ., அமலாக்கத்துறையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், தங்களை காப்பாற்றி கொள்ளும் வகையில் இவர்கள் தங்களது ஆதரவு எம்.எல்.ஏ.க்களுடன் எடப்பாடி பழனிசாமியை எதிர்த்து த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

**எஸ்.பி.வேலுமணி**

அ.தி.மு.க. ஆட்சி 2015-18ம் ஆண்டு காலத் தில் உள்ளாட்சித்துறை அமைச்சராக எஸ்.பி.வேலுமணி இருந்தார். அவரது பணிக் காலத்தில் சென்னை மற்றும் கோவை மாநகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தெரு விளக்குகளை எல்.இ.டி. பல்புகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. அதன்படி அப்போதைய சந்தை மதிப்பில் ரூ.600 விலையில் இருந்த எல்.இ.டி. விளக்குகளை டெண்டர் எடுத்த நிறுவனங்கள் ஒரு எல்.இ.டி. விளக்கு ரூ.4,500 என வாங்கியதாக கணக்கு காட்டி மோசடி நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன் மூலம் டெண்டர் எடுத்த கே.சி.பி. இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் உள்ளிட்ட நிறுவனத்தின் மூலம் அரசுக்கு ஒரு எல்இடி விளக்குகள் ரூ.3,900 வரை இழப்பு ஏற்பட்டது. அதன்படி கடந்த 2015 முதல் 2018ம் ஆண்டு வரை அதாவது 3 ஆண்டுகள் எல்.இ.டி. விளக்குகள் வாங்கியதில் ரூ.500 கோடி வரை ஊழல் நடந்தது அம்பலமானது. டெண்டர் எடுத்த நிறுவனங்கள் அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி.வேலுமணியின் பினாமி நிறுவனங்கள் என்றும், அந்த நிறுவனங்கள் டெண்டர் எடுக்கும் வகையில் சில விதிமுறைகளும் திருத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அளித்த புகாரின்படி லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தியதில் பினாமி நிறுவனங்களுக்கு ஆதரவாக டெண்டர் விதிகளில் திருத்தம் செய்தது மற்றும் எல்.இ.டி. விளக்குகள் கொள்முதல் செய்ததில் பல நூறு கோடி ரூபாய் முறைகேடு நடந்தது உறுதியானது. அதைதொடர்ந்து எஸ்.பி. வேலுமணி மற்றும் டெண்டர் எடுத்த நிறுவனங்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்து கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 13ம் தேதி எஸ்.பி.வேலுமணிக்குச் சொந்தமான 26 இடங்களில் சோதனை நடத்தி வழக்கு தொடர்பான முக்கிய ஆவணங் களை கைப்பற்றியது. அதே போல், சென்னை மாநகராட்சியில் கடந்த 2018ம் ஆண்டு மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள டெண்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டது

அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்து எஸ்.பி.வேலுமணி மழைநீர் வடிகால் பணிகள் செய்ய டெண்டர் விடப் பட்டது. டெண்டர் எடுத்த நிறுவனத்திற்கு ஆதரவாக ஒப்பந்த புள்ளி வழங்கியதன் மூலம் ரூ.26.61 கோடி முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அது தொடர்பாக அறப்போர் இயக்கம் சார்பில் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தியதில் பினாமி நிறுவனத்திற்கு டெண்டர் விடும் வகையில் சென்னை மாநகராட்சியை சேர்ந்த 11 பொறியாளர்கள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு ஆதரவாக முறைகேட்டில் ஈடுபட்டது உறுதியானது.

அதைதொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய பொறியாளர்கள் உள்பட 11 பேர் மீது ரூ.26.61 கோடி முறைகேடு மற்றும் எல்.இ.டி. விளக்கு முறைகேடு என மொத்தம் ரூ.98.25 கோடி மோசடி செய்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் எஸ்.பி.வேலுமணி 2016-21ம் ஆண்டு காலத்தில் அமைச்சராக பணியாற்றினார். அவரது பணிக்காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.58.23 கோடி சொத்து சேர்த்தது தொடர்பாக எஸ்.பி.வேலுமணி மற்றும் அவரது சகோதரர், அவரது பினாமிகள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த டெண்டர் முறைகேடு மற்றும் வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்தது என மொத்தம் 2 வழக்குகள் லஞ்ச ஒழிப்புத்துறையில் நிலுவையில் உள்ளது.

2026ம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என்றும், அப்போது தன் மீது போடப்பட்ட லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கில் இருந்து தப்பித்து விடலாம் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி நினைத்தார். ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் யாரும் எதிர்பார்க்காத வகையில் நடிகர் விஜய் கட்சி த.வெ.க. ஆட்சிக்கு வந்தது. அ.தி.மு.க. வெறும் 47 எம்.எல்.ஏ.க்களுடன் இந்த தேர்தலில் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. தமிழகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் முதல்வராக பதவியேற்றுக் கொண்டார்.

தேர்தல் நேரத்தில் விஜய், முன்னாள் அமைச்சர்கள் ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதன்படி விஜய் லஞ்ச ஒழிப்புத்துறையில் முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகள் தொடர்பான கோப்புகளை லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் எஸ்.பி.வேலுமணி மீதான இரண்டு வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் இறுதிகட்ட விசாரணையில் இருப்பது தெரியவந்தது.

**சி.விஜயபாஸ்கர்**

முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 2016-21ம் ஆண்டு சுகாதாரத்துறை அமைச்சராக பணியாற்றினார். தனது பணிக்காலத்தில் சி.விஜய பாஸ்கர் தனது வருமானத்தை காட்டிலும் ரூ.35.79 கோடி சொத்து குறிப்பு வழக்கு லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்து கடந்த 2023ம் ஆண்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. இந்த சொத்து குவிப்பு வழக்கில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனையின் போது சி.விஜய பாஸ்கர் மனைவி ரம்யா வீட்டில் இருந்து ரூ.23.85 லட்சம் ரொக்க பணம், 4.87 கிலோ தங்கம் மற்றும் பல கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதவிர சி.விஜயபாஸ்கர் மீது தமிழகம் முழுவதும் குட்கா விற்பனை செய்ய குட்கா வியாபாரிகளிடம் பல கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியது தொடர்பாக சி.பி.ஐ. வழக்கு ஒன்று உள்ளது. பணம் மோசடி தொடர்பாக ஒன்றிய அமலாக்கத்துறையில் வழக்கு ஒன்றும், திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவ கல்லூரி தொடங்க அடிப்படை வசதிகள் இல்லாத கல்வி நிறுவனத்திற்கு மருத்துவ கல்லூரி தொடங்க தடையில்லா சான்று வழங்கியது தொடர்பான வழக்கு என முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீது 4 வழக்குகள் நிலுவையில் உள்ளது.

**எம்.ஆர்.விஜயபாஸ்கர்**

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது கரூர் மாவட்டத்தில் மேலக்கரூர் சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட பகுதியில் ரூ.100 கோடி மதிப்புள்ள 22 ஏக்கர் நிலம் அபகரித்த வழக்கில், எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவரது சகோதரர் சேகர், பிரவீன் உள்ளிட்ட 13 பேர் மீது மோசடி உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் சிபிசிஐடி போலீசார் வழக்கு பதிவு செய்து எம்.ஆர்.விஜயபாஸ்கரை கைது செய்தனர். தற்போது எம்.ஆர்.விஜயபாஸ்கர் நிதிமன்றத்தின் நிபந்தனை ஜாமீனில் வெளியே உள்ளார். கடந்த பிப்ரவரி மாதம் அனுமதியின்றி ஆற்று மணலை கொட்டி வைத்திருந்ததாக எம்.ஆர். விஜயபாஸ்கர் மீதான வழக்கு தற்போது சி.பி.சி.ஐ.டி.யில் நிலுவையில் உள்ளது. வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

**நத்தம் விஸ்வநாதன்**

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் கடந்த 2017ம் ஆண்டு அப்போ தைய அ.தி.மு.க. ஆட்சியில் மின்சாரத்துறை அமைச்சராக இருந்தார். இவரது பணிக் காலத்தில் சூரிய மின் சக்தி திட்டத்துக்காக அதிகளவில் நிலம் கையப்படுத்தப்பட்டது. அந்த வகையில் சூரிய மின்சக்தி நிலையம் அமைக்க நிலம் வாங்கியதில் ரியஸ் எஸ்டேட் வியாபாரி ஒருவரிடம் ரூ.50 லட்சம் மோசடி செய்ததாக நத்தம் விஸ்வநாதன் மீது திருச்சியில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும், அமைச்சராக இருந்த போது, ரூ.3 கோடி மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது.

**ஆர்.காமராஜ்**

2011-21ம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் உணவு மற்றும் சிவில் சப்ளை அமைச்சராக பணியாற்றினார். அவரது பணிக்காலத்தில் தனது அதிகாரத்தை பயன்படுத்தி வருமானத்திற்கு அதிகமாக ரூ.127.49 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொது விநியோ கத்திற்கான உணவு பொருட்கள் கொள்முதல் செய்ததில் விலையை உயர்த்தி பொருட்கள் கொள்முதல் செய்ததாக ஆர்.காமராஜ் மீது ரூ.350 கோடி ஊழல் புகாரை லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணையில் உள்ளது. ஆர்.காமராஜ் மற்றும் அவரது மகன்களான டாக்டர்கள் இனியன், இன்பன் ஆகியோர் பினாமி நிறுவனம் மூலம் தஞ்சாவூரில் ‘ காமாட்சி மெடிக்கல் சென்டர்’ என்ற பெயரில் பன்னோக்கு மருத்துவமனை உள்ளிட்ட சொத்துகள் வாங்கியதாக புகாரும் லஞ்ச ஒழிப்புத்துறையில் நிலுவையில் உள்ளது.

இதுபோன்று லஞ்ச ஒழிப்புத்துறை, சி.பி.சி.ஐ.டி., சி.பி.ஐ., அமலாக்கத்துறையில் பல்வேறு வழக்குகளில் சிக்கியுள்ள தற்போது எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், தோல்வி அடைந்த எம்.ஆர்.விஜயபாஸ்கர், நத்தம்விஸ்வநாதன், ஆர்.காமராஜ் உள்ளிட்டோ தங்கள் வழக்குகளில் இருந்து தப்பிக்கும் வகையில், எடப்பாடி பழனி சாமி மீது தேர்தல் தோல்வி மற்றும் ஆட்சி அமைப்பதற்கு கூட்டணி தொடர்பாக காரணங் களை கூறி, எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துடன் இணைந்து எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கரன், எம்.ஆர்.விஜயபாஸ்கரன், ஆர்.காமராஜ், நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் தங்களது ஆதரவு எம்.எல்.ஏ.க் களுடன் த.வெ.க.வில் இணைந்துள்ளதாக எஸ்.பி. வேலுமணி நெருங்கிய வட்டாரத்தில் இருந்து தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

## த.வெ.க.வுக்கு ஆதரவுக்கான பின்னணி குறித்து பரபரப்பு தகவல்கள்!

நன்றி :
**‘தினகரன்’**
13,05,2026

# கேள்விக் கென்ன பதில்?

**கேள்வி:** முதல்வர் விஜய்யின் தனி அதிகாரியாக (அரசியல்) ரிக்கி ரதன் பண்டிட் வெற்றிவேல் என்பவர் நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிடப் பட்டுள்ளதே ?

**பதில்:** அடிப்படையில் அவர் ஒரு ஜோதிடர். முதலில் பா.ஜ.க.வின் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர்க்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும் ஆஸ்தான ஜோதிடராக இருந்தவர். பின்னர் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, அவருக்கு **‘போயஸ் மாளிகை ஆஸ்தான ஜோதிடராக ‘** இருந்து பின்னர் வெளியேற்றப்பட்டவர்.

அவர்தான் இப்போது அண்மைக் காலமாக விஜய்க்கு ஜோதிட ஆலோசகராக இருந்து, வழிநடத்தி வருபவர்.

வெற்றிவேல் என்ற தனது பெயரை, வடபுலத்திற்கு ஜோதிட வேலை பார்க்கச் சென்றதும், ரிக்கி ரதன் பண்டிட் என்று மாற்றிக்கொண்டவர் அவர்.

அவர் இப்போது தமிழ்நாடு அரசில், முதல்வரின் அரசியல் ஜோதிடராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்த நியமனம், அறிவியல் மற்றும் பகுத்தறிவுக்கு முற்றிலும் மாறுபட்டது. விஞ்ஞான மனப்பான்மையை ( Scientific Temper) ஊக்கவிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நோக்கத்திற்கு எதிரானது.

ஜோதிடம், பஞ்சாங்கம், ராகு காலம் எம கண்டம், அஷ்டமி, நவமி என்பதெல்லாம் தனிப்பட்ட விருப்புரிமையைச் சார்ந்தது.

**‘நான் ஒன்றும் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவன் இல்லை‘ என்று பதவி ஏற்ற அன்றே பிரகடனப் படுத்திய முதல்வர் விஜய், மன்னர்கள் காலத்தில் இருந்துவந்த அரண்மனை ஜோதிடர் ( ராஜ குரு ) என்ற உதிர்ந்து, உலர்ந்து போன பழைய மூடப் பழக்க வழக்கத்திற்கு அரசு ரீதியாக அங்கீகாரம் வழங்கியுள்ளது, பல்வேறு ஹேஷ்யங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் வித்திட்டுள்ளது.**

ஆரோக்கியமான அரசியல் முன்மாதிரிகளை உருவாக்கிட புறப்பட்டு இருக்கிறேன் என்று சொன்ன முதல்வர் விஜய், ரிக்கி ரதன் பண்டிட் வெற்றிவேல் என்ற அனைவரும் அறிந்த ஜோதிடருக்கு, அரசு நியமனம் வழங்கி, கண்டனத்திற்குரிய மிகப் பெரிய முரண்பாட்டை ஏற்படுத்திவிட்டார் !

**இதற்கிடையே, ஜோதிடர் ரிக்கி ரதன் பண்டிட்டை விஜய் அரசின் தனி அதிகாரியாக நியமனம் செய்த உத்தரவுக்கு எதிராகப் பல முனைகளிலும் கண்டனம் எழுந்ததை அடுத்து, அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.**

**பதவி ஏற்ற மூன்றாம் நாளே இப்படி ஆஸ்தான ஜோதிடரை, அரசின் பணிக்கு அவசரம் அவசரமாக நியமனம் செய்ததேன்? எதிர்ப்புகள் எழுந்ததும், உடனே ஒரே நாளில் நியமன உத்தரவைத் திரும்பப் பெறுவதேன்?**

**இதற்குப் பெயர்தான், முதல்வர் விஜய் மொழியில், ‘குதிரை வேகமோ’?**

### விருதுநகர் முன்னாள் நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.ராஜாக்கனி

# புதல்வர் பால்பாண்டி இல்லத் திருமண விழா!

### கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு நடத்தி வைத்து வாழ்த்து!

*விருதுநகர், மே, 14 -*

*விருதுநகர் முன்னாள் நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.ராஜாக்கனி மகனான பால்பாண்டி - லாவண்யாவின் மகளான ஆர்.பி. சங்கீதா - முருகப் பாண்டியன் - உமாராதாவின் மகனான எம்.கதிரவக் கண்ணன் ஆகியோர்களுக்கு வருகின்ற 18.05.2026 அன்று விருதுநகர் இராமமூர்த்தி ரோடு, S.S.K. சரஸ்வதி மஹாலில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் நல்லாசியுடன் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் திருமணம் நடைபெற உள்ளது.*



*இவ்விழா விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் K.K.S.S.V.T. சுப்புராஜ், பொதுச் செயலாளர் நாடார் மகாஜன சங்கம் கரிக்கோல்ராஜ் ,*

*எஸ்.ஆர்.எஸ்.ஆர். ரமேஷ்குமார் ஜெகதா, நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், எஸ்.ஆர்.எஸ்.ஆர்.பால் பாண்டியன், லாவண்யா, ஆர்.பி.சவீதா,*

*ஆர்.பி.சரண், வார்டு கழகச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். ராஜசேகரன் சிவனேஸ்வரி, நகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் இந்திரா தனபாலன், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார் செண்பகவல்லி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.*

*மேலும் விருதுநகர் மாவட்ட , நகர, ஒன்றிய, கிளைக் கழக அனைத்து தி.மு.க. உறுப்பினர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.*

*வரவேற்பு நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் வழங்க உள்ளார்.*





இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாலாஜா மத்திய ஒன்றியம் பகுதிகளில் உள்ள வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகி கள் மற்றும் தொண்டர்களிடம் முன்னாள் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப் பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர். காந்தி நன்றி தெரிவித்தார் . இதில் ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட் ஜி.கே.குழுமம் சந்தோஷ் காந்தி மாவட்ட துனை செயலாளர் குமுதா குமார், பேரூர் செயலாளர் சி. பெரியசாமி ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



அகில இந்திய அளவில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் டெல்லியில் என்.சி.ஆர். கார்ப்பரேட் நிறுவனத்திலும், பொதுத்துறை மத்திய நிறுவனங்களிலும் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்துவதை எதிர்த்தும், ஒன்றிய மோடி அரசின் தவறான தொழிலாளர் விரோத அரசைக் கண்டித்து, விருதுநகர் பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் R.V.மாடசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தொ.மு.ச. போக்குவரத்து பொதுச்செயலாளர் ரா.ராஜசெல்வம், தொ.மு.ச. மின்சார வாரியம் அண்ணாதுரை, AITUC ராஜேந்திரன்,பாண்டியன்,CITU P.N.தேவா, எம்.மகாலெட்சுமி,UTUC இளங்கோ, பாலசுப்பிரமணியம், CITU முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன், தொ.மு.ச. நிர்வாகிகள், தொழிலாளா உடன்பிறப்புகளும், அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகளும், தொழிலாளர்களும் திரளாக கலந்து கொண்டனர் .